2276

# அகில இலங்கை
# தமிழ்க் காங்கிரஸ்

K. P. Balateeswaran
670 K.K.S Road
JAFFNA

## யாழ்ப்பாணம்
## மாநகரசபைத் தேர்தல்
## விஞ்ஞாபனம் 1968.

LIBRARY
JAFFNA
9/18

6, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

## யாழ்ப்பாணம் மாநகரசபைத் தேர்தல் விஞ்ஞாபனம்

எமது யாழ்ப்பாண மாநகர சபையின் நடைமுறைகளையும் செயல்திட்டங்களையும் அதன் வளர்ச்சியையும் கவனிக்கும் பொழுது கடந்த சில காலமாக அமைதியின்மையும், ஸ்திரமான திட்டமின்மையும் நிலவுவதை உணர்ந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி, மாநகரசபையின் உறுப்பினர்கள் ஒற்றுமையும் ஏகோபித்த கொள்கையும் வேலைத்திட்டமும் உடையவர்களாய் அமைதல் வேண்டுமென்பதை விரும்புகின்றது.

அதன் காரணமாக மாநகரசபைத் தேர்தலில் கட்சி அடிப்படையிலும், ஒரு சிறந்ததிட்டத்தின் அடிப்படையிலும் எல்லா வட்டாரங்களிலுமிருந்து ஏகோபித்த நல்ல மனப்பான்மையும் சாதனைத் திறமையுமுடைய அபேட்சகர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும் உணர்கின்றது. ஆகவே யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் இக்கொள்கையை அடிப்படையாக வைத்து எமது கட்சியின் அபேட்சகர்களை நிறுத்தி தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றையும் வெயிடவேண்டும் என்றும் உணர்ந்துள்ளோம்.

யாழ்ப்பாணம் மாநகரசபைத் தேர்தலில் பல வட்டாரங்களிலும் கட்சி அடிப்படையில் அபேட்சகர்களை நிறுத்தும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் அதன் வேலைத்திட்டங்களை வாக்களார், வரியிறுப்பாளர்களின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றது. கடந்த காலங்களைப் போல மாநகரசபையில் அமைதியின்மையும் ஸ்திரமற்ற நிர்வாகமும் இடம்பெற வழிவகுக்காது பெரும்பான்மை வாக்குகளால் எமது கட்சி வேட்பாளர்களைத் தேர்ந்தனுப்புவதன் மூலம் உறுதியான நிர்வாகத்தையாக்க ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றோம். வருங்காலத்தே சபைமுதல்வர்களை ஏற்றுவதும், இறக்குவதுமான கேவலச் செயல்களுக்கு வரியிறுப்பளார்கள் இடம் கொடுத்தல் கூடாதென எம் கட்சி மாநகரசபை வரியிறுப்பாளர்களை வேண்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வேலைத்திட்டம்

## 1. மொழி

மாநகரசபை நிர்வாகங்கள் இதர விவகாரங்கள், சாதனங்கள், அறிக்கைகள், கடிதங்கள், யாவும் தமிழ் மொழியிலேயே நடைபெறும்.

## 2. சுகாதாரம்

அ. ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுப் பூர்த்தியடையாதிருக்கும் வடிகால் திட்டத்தைப் பூர்த்தியாக்க மத்திய அரசாங்க உதவியுடன் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

ஆ. நகர எல்லைக்குள் மழைக்காலத்தே வரும் வெள்ளத்தை வசதியான இடங்களிலும், தேக்கங்களிலும் சேமித்து வைக்கவும், சகல குளங்களும் ஆழமாகத் தோண்டப்பட நடவடிக்கையெடுப்பதற்கும், தேவைக்கு மிஞ்சிய வெள்ளங்கள் ஓடுவதற்கு சகலவாய்க்கால்களையும் ஏற்றனவாக்கவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

இ. ஒவ்வோர் வரியிறுப்பாளரும் வாழிக் கக்கூசுக்குப் பதில் நீரடைப்புக் கக்கூசு கட்டத் தேவையான உதவி பெறுவதற்கு எத்தனங்கள் செய்யப்படும்.

ஈ. குடிசனம் நெருங்கிய பகுதிகளுக்கும் வட்டாரங்களுக்கும் ஒவ்வோர் மத்திய மருந்துச்சாலையும், பிரசவ விடுதியும் உண்டாக்கல்.

உ. இதுகாறும் தடுத்துவைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாண வெளி நோயாளர் வைத்தியசாலையை விஸ்தரிக்கவும், புதிதாகக் கட்டவும் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பரிபூரண ஒத்துழைப்புக் கொடுத்தல்.

ஊ. அரசாங்க மருத்துவ மனையையும் மத்திய மருந்துச் சாலையையும் தரம் உயர்த்தல்.

எ. பின்தங்கிய வட்டாரங்களில் வசிக்கும் ஏழை மக்களின் நலன் கருதி நடமாடும் மருந்துச் சாலைகள் உண்டாக்கல்.

ஏ. நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கு உணவுச் சுத்தக் கட்டுப்பாட்டுச் சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருதல்.

ஐ. சலவைத் தொழிலாளர் குளங்களில் சலவை செய்யும் இன்றைய சுகாதாரமற்ற நிலைமையை மாற்றி சலவைத் தொழிலாளர்களுக்குக் கிணறும் தேவையான பைப்நீர் வசதியும் சேலைகள் காயவிடக்கூடியதான இடவசதிகளும் கொடுக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆயுள்வேத வைத்தியம்

அ. தற்போதுள்ள ஆயுள்வேத மருந்துச் சாலையை இன்னும் முன்னிலைக்குக் கொண்டுவரல்.

ஆ. கைதடியில் அரசாங்கம் அமைக்கவிருக்கும் 500 படுக்கைகளைக் கொண்ட ஆயுள்வேத வைத்திய மனையை உடனடியாகப் பூர்த்தியாக்கும்படி மத்திய அரசாங்கத்தைத் தூண்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளைக் கையாளல்.

4. தண்ணீர் விநியோகம்

அ. இப்போது அமுலாக்கப்பட்டிருக்கும் தண்ணீர் விநியோக 1-ம் திட்டத்தைச் சீர்ப்படுத்தல்.

ஆ. இன்று குழாய் நீர்பெருத சகல வட்டாரங்களுக்கும் குழாய் நீர் 2-ம் திட்டத்தை உடனடியாக அமுலாக்கத் தேவையான நடவடிக்கைகளைக் கையாளல்.

இ. தண்ணீர் விநியோகத்தில் இன்றுள்ள தடைகளை அகற்ற நடவடிக்கை யெடுத்தல்.

5. மின்சாரம்

அ. சகல வட்டாரங்களுக்கும் வரியிறுப்பாளர்கள் வசிக்கும் ஒழுங்கைகள், வீதிகள் மின்சாரவசதி பெற நடவடிக்கை யெடுத்தல்.

ஆ. குறைந்த செலவில் வரியிறுப்பாளர்கள் மின்சாரம் பெறத் தேவையான நடவடிக்கைகள் கையாளல்.

இ. இடையிடையே வரியிறுப்பாளர்களுக்கு இடைஞ்சலைத்தரும் இன்றைய மின்சார விநியோகத்தைத் திருத்தியமைக்கும் இப்போதைய ஒற்றைத் தொடர்பு விநியோகத்தை மாற்றி இரட்டைத் தொடர் விநியோகம் (ஒன்று சுன்னுகம் மூலம் தொடர்பு கொள்ளல் மற்றது பலாலி மூலம் தொடர்பு படுத்தியிணைத்தல்) ஏற்படுத்த நடவடிக்கை யெடுக்கப்படும்.

ஈ. நகரின் முக்கிய கேந்திர ஸ்தானங்களில் இன்னும் பல ரான்ஸ்போமர்கள் அமைக்க நடவடிக்கை யெடுக்கப்படும்.

உ. மாநகரசபை செய்து கொள்ளும் ஒப்பந்தப்படி 230 வோல்ற் மின்சாரம் விநியோகிக்காது 110 வோல்ற் கொடுக்கும் இன்றைய முறைக்கு மாற்ற உடன் நடவடிக்கை யெடுக்கப்படும். 230 வோல்ற் மின்சார விநியோகத்தைத் திறமைப் படுத்த நடவடிக்கை யெடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. வீட்டு வசதித் திட்டம்

அ. வீடமைப்புத் திட்டங்களில் வாடகையைக் கூட்டாதிருக்கவும் வீட்டு வசதிகளைக் கூட்டவும் திருத்தங்கள் செய்யவும் நடவடிக்கையெடுப்போம். ஏற்கெனவே ஆக்கப்பட்ட குரு நகர் வீட்டுவசதித்திட்டம் மேலும் தேவையான விஸ்தரிப்பையடைய வேண்டிய நடவடிக்கைகள் கையாளல்.

ஆ. பணவசதி உடையவர்கள் நாம் இருக்கும் இல்லங்களை மாத வீதம் பணம் கொடுத்து அவ்வீடுகளைச் சொந்தமாக்கிக் கொள்ள நடவடிக்கைகள் எடுத்தல்.

இ. புதிய வீட்டுவசதித் திட்டங்களை நாவாந்துறை, பண்ணை, கொழும்புத்துறை, பாஷையூர், முஸ்லீம் வட்டாரங்கள், தேவரிக்குளம், தாராக்குளம் ஏனைய குடிசன நெருக்கமுள்ள பகுதிகளுக்கும் வீட்டமைப்புத் திட்டத்தையாக்க மத்திய அரசின் உதவியைப் பெறுதல்.

## 7. போக்குவரத்து

அ. வரியிறுப்பாளர் நலன்கருதி பொதுவாகப் பாடசாலைப் பிள்ளைகள் வசதிக்காக யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் பலவீதிகளில் பஸ் ஓட இ. போ. சபையுடன் தேவையான நடவடிக்கைகள் எடுப்போம்.

ஆ. கொழும்புத்துறை, பாஷையூர், வண்ணார்பண்ணை, நாவாந்துறை, நல்லூர், கந்தர்மடம், சுண்டிக்குளி மற்றைய இடங்களில் பல விஸ்தரிப்பு நிலையங்களையும் உப பஸ்நிலையங்களையும் நிறுவ நடவடிக்கையெடுப்போம்.

இ. பொதுவாகப் பட்டினத்தில் இ. போ. ச. பஸ் சேவையைத் திறம்படச் செயலாற்றுவோம்.

(ஈ.) Traffic ... → Expansion

## 8. வரியிறுப்பாளர் நலவுரிமை

அ. வரியிறுப்பாளர்களுக்கும் சபை அங்கத்தவர்களுக்குமிடையே பரஸ்பர நல்லெண்ணத்தையும் தொடர்பையும் ஏற்படுத்தும் முகமாக வட்டார அங்கத்தவரை தலைவராகக் கொண்ட "வட்டார வரியிறுப்பாளர் நலவுரிமைக் குழு" எமது கட்சி அங்கத்தவர்களைக் கொண்டுள்ள வட்டாரங்களில் ஆக்கப்படும்.

ஆ. வட்டார வரியிறுப்பாளர் நலவுரிமைக்குழுவால் ஆராயப்பட்டு தீர்மானிக்கப்பட்ட வட்டார வேலைகளுக்கு எமது கட்சி அங்கத்தவர்கள் சகலரும் ஆதரவு கொடுப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. விளையாட்டுமைதானம்

அ. ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்திக்காக தேவையான நடவடிக்கைகள் கையாளப்படும்.

ஆ. ஒவ்வோர் வட்டாரத்துக்கும் ஒவ்வோர் விளையாட்டு மைதானமும், சிறுவர் விளையாட்டு அரங்கும் அமைப்பதன் மூலம் சிறுவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்கம் அளிக்கத் தேவையான நடவடிக்கைகள் கையாளப்படும்.

## 10. நூல்நிலையம்

அ. பொதுநூல் நிலையத்தில் சிறுவர்களுக்குப் தேவையான தமிழ் புத்தகங்கள் போதியளவில்லாமையால் அதிகப்படியான தமிழ் புத்தகங்கள் இடம்பெற தேவையான நடவடிக்கையெடுக்கப்படும்.

## 11. பொதுச் சந்தை

அ. நவீன சந்தை நிர்மாணிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் மேலும் விரிவான முறையிலான அமைப்புக்கு வழிசெய்தல்.

ஆ. மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் சந்தைகளைத் திருத்தி வரியிறுப்பவர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் வசதிக் குறைவுகள் ஏற்படாது கவனித்தல்.

இ. தேவையான இடங்களில் சந்தைகளமைக்க நடிவடிக்கையெடுத்தல்.

ஈ. சந்தைகளில் விற்பனையாளரிடமிருந்து கட்டுப்படுத்தப்பட்ட வாடகைப் பணத்திலும் அதிகமாக அறவிடுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். அறவிடுபவர் பற்றுச்சீட்டு கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

உ. பெரியகடை மரக்கறி விற்பனை நிலையத்தைப்போன்று இதர சந்தைகளிலும் கேள்விகள் மூலம் சந்தைகள் கொடுக்கவும் மக்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் இடையே முரண்பாடேதுமின்றி நடைபெற ஆவன செய்யப்படும்.

## 12. வீதிகள் ஒழுங்கைகள்

அ. இன்றுள்ள வீதிகளின் அவல நிலையைப் போக்கிச் சகல வீதிகளும் நல்ல நிலையில் கல்போட்டு, தாரிட்டு போக்குவரத்திற்கு உகந்ததாக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

ஆ. சகல வட்டாரங்களிலுமுள்ள பின்தங்கிய பகுதிகளிலுள்ள சகல ஒழுங்கைகளும் அபிவிருத்திசெய்து போக்குவரத்திற்கு உகந்ததாக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. பிரதான சந்திகள் 50 அடி சுற்றளவுள்ளதாக இருக்க வேண்டும். ஆனால் இங்கு 25 அடிக்கு உட்பட்டதாக உள்ளது. இது மாற்றியமைக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

## 13. இலவச பாடப்புத்தகங்கள்

மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் ஏழைப் பிள்ளைகளின் படிப்பு நலன்கருதி இலவச பாடப்புத்தக விநியோகத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருதல்.

## 14. உணவு உற்பத்தி

யாழ், மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் நகரசபை நிலங்கள் இதரசாகுபடி செய்யப்படாத இடங்கள் உணவு உற்பத்திக்காகப் பயன்படுத்த நடவடிக்கையெடுத்தல்.

## 15. கடற்றொழில்

அ. காக்கைதீவு, நாவாந்துறை, குருநகர், பாசையூர், கொழும்புத்துறை முதலிய மீன்பிடித்துறைகளை அபிவிருத்தி செய்யவும் கடற்றொழில் அபிவிருத்திக்கும் நடவடிக்கையெடுத்தல்.

ஆ. காக்கைதீவு, கச்சைதீவு, மண்டைதீவு, நெடுந்தீவு முதலிய இடங்களில் மீனவர்கள் நலன்கருதி வெளிச்ச வீடுகளாக்க மத்திய அரசின் உதவி நாடப்படும்.

இ. யா.மா.சபை எல்லைக்குள்ளிருக்கும் கடற்றொழிலாளரது சேர் வலைகள் களவுபோவதை தடுக்க நடவடிக்கை யெடுத்தல்.

## 16. ஊழியர் குறைகள்

அ. மாநகரசபை ஊழியர்களின் நீண்டகாலக் குறைகளையகற்றி ஊழியர் மத்தியிலே பரஸ்பர நல்லெண்ணத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுத்தல்.

ஆ. தொழிலாளர்களினதும், மாநகரசபை நிர்வாகத்தினரதும் கூட்டுக் கௌன்சிலைக் காலத்திற்குக் காலம் கூட்ட நடவடிக்கையெடுப்பதன் மூலம் தொழிலாளரின் நலவுரிமைகளைப் பாதுகாத்தல்.

இ. மாநகரசபை தொழிலாளர்களுக்கென ஓர் வீட்டு வசதித் திட்டத்தை உருவாக்க நடவடிக்கையெடுத்தல்.

ஈ. தொழிலாளர்களது தேவையைப் பூர்த்தி செய்ய எமது கட்சியின் மாநகரசபை அங்கத்தவர்கள் தேவையான உதவிகளைச் செய்வரென உறுதி கூறுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காட்டப்பட்ட வேலைத்திட்டங்கள் எமது கட்சியின் மத்திய குழுவின் பரிசீலனையின்பின் ஆக்கப்பட்டதொன்ருகும். இந்த வேலைத்திட்டத்தைச் எமது கட்சியின் சகல வேட்பாளர்களும் ஏற்று இத்திட்டத்தின்கீழ் யாழ்ப்பாண மக்களுக்குத் தொண்டாற்றுவோமென திடசங்கல்பம் செய்துள்ளார்கள். எனவே எமது கட்சியின் அபேட்சகர்களை அதிகப்படியாக, யாழ். மாநகரசபைக்குத் தேர்ந்தனுப்பின் எம்கட்சி உறுப்பினர்கள், உண்மையான சேவா உணர்ச்யுடன் யாழ்ப்பாண மாநகரசபை வரியிறுப்பாளர்களுக்குத் தொண்டாற்றுவார்களென்று உறுதி கூறுவதுடன், எமது கட்சி வேட்பாளர்களையே உங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யுமாறு பணிவுடன் வேண்டுகின்ருேம்.

வாழ்க தமிழ், வெல்க காங்கிரஸ்!

வணக்கம்.

---

இப்பிரசுரம் அ. இ. த. கா. இணைக் காரியதரிசி தா. சங்கரப்பிள்ளை அவர்களால் யாழ்ப்பாணம், 30, பெரிய தெருவில் இருக்கும் கொம்மேஷல் பிறெஸ் அன் ஸ்ரோசில் அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. (1367) 1968.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org